


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351
ISSN: 2582–5518






## தமிழகத்தில் அதிமுகதான் பிரதான எதிர்க்கட்சி அண்ணாமலைக்கு இபிஎஸ்

# பதிலடி

## அதிமுக - பாஜக குறித்து செய்தியாளர்கள் ஒரே கேள்வியை திரும்பத் திரும்ப கேட்டால் எப்படி பதில் சொல்லுவது: எடப்பாடி பழனிசாமி





**சென்னை , அக். 7–**

**"அதிமுகதான் பிரதான எதிர்க்கட்சி. 30 ஆண்டு காலம் தமிழகத்தில் ஆட்சி செய்த கட்சி. பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து மக்களுக்கு மிகப்பெரியஅளவில்நன்மை செய்து மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள கட்சி. எனவே, சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு அவ்வாறு கூறுகின்றனர்" என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு பதிலடி தரும் விதமாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

கோவை விமான நிலையத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "திமுக அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக, 2021சட்டமன்றத் தேர்தலின்போது, முதல்வர் ஸ்டாலின் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். திமுக சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் வாக்குறுதியில் இடம்பெற்றுள்ளதை நிறைவேற்றித்தரும்படிதான் இடைநிலை ஆசிரியர்கள் கேட்கின்றனர். எனவே, அதை நிறைவேற்றுவது இந்த அரசினுடைய கடமை. காரணம், இவர்கள் வாக்குறுதி கொடுத்துள்ளனர். எனவே, இடைநிலைஆசிரியர்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகைதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், "இந்த அரசு சர்வாதிகாரப்போக்குடன் செயல்பட்டு வருகிறது. சமூக வலைதளங்கள் வழியாகநாட்டில்நடக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறினால், அரசால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதுவும், அதிமுக தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் என்றால், தொடர்ந்து பொய் வழக்குகளைப் போடுவதுதான், இந்த அரசினுடைய வாடிக்கையாக இருக்கிறது. இதற்கெல்லாம் ஒருகாலத்தில் பதில் சொல்லியாக வேண்டும்" எனறார்.

காவல் துறை வழக்குப் பதிவு செய்வதில் அடிக்கடி குளறுபடிகள் இருப்பது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு, "ஒட்டுமொத்தமாக இந்த அரசே குளறுபடியாகத்தான் இருக்கிறது. அரசு சரியாக இருந்தால்தானே, காவல் துறைசரியாகசெயல்படும். தலைமை சரியாக இருந்திருந்தால், இந்த பிரச்சினைகளுக்குஎல்லாம் இடம் அளித்திருக்க மாட்டார்கள். தமிழகத்தில் தினந்தோறும் கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை அன்றாட நிகழ்வுகளாக உள்ளன. ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளில் இந்த செய்திதான் அதிகமாக இடம்பெறுகிறது. இந்த அரசாங்கத்தின் மெத்தனப்போக்கு. ஒரு நிர்வாகத் திறமையற்ற அரசாங்கம். பொம்மை முதல்வர் இந்த மாநிலத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கிறார். இந்த ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு கிடையாது" என்றார்.

மக்களவைத் தேர்தலில் திமுகவுக்கும் பாஜகவுக்கும்தான்போட்டி என்று அண்ணாமலை கூறியிருப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "அவர் அப்படி கூறினால், அதற்கு நான் என்ன சொல்ல முடியும்? இதுகுறித்து அவரிடம்தான் கேட்க வேண்டும். மக்களிடம் சென்று கேளுங்கள், யாருக்கு யார் எதிரி என்று மக்கள் தெளிவாக கூறுவார்கள். அதிமுகதான் பிரதான எதிர்க்கட்சி. 30 ஆண்டு காலம் தமிழகத்தில் ஆட்சி செய்த கட்சி. பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து மக்களுக்கு மிகப் பெரிய அளவில் நன்மை செய்து மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள கட்சி அதிமுக. எனவே, வேண்டுமென்றே திட்டமிட்டு சிலர் அவ்வாறு கூறுகின்றனர். அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்றார்.

அப்போது, திமுகவுடன் யாருக்கு போட்டி என்று பாஜகவுக்கும் அதிமுகவுக்கும் போட்டி இருப்பதாக உதயநிதி கூறியிருப்பதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், "உதயநிதி மாய உலகத்தில் மிதந்து கொண்டிருக்கிறார். மக்களவைத் தேர்தலின்போது அதற்கு விடிவு காலம் பிறக்கும்" என்றார்.

பாஜக மேலிடப் பொறுப்பாளர் உங்களுடன் பேசி வருகின்றனரா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "ஒருபோதும் கிடையாது. அதிமுக ஏற்கெனவே தெளிவான முடிவை எடுத்து அறிவித்துவிட்டது. இந்தப் பத்திரிகை மற்றும் ஊடகங்கள்தான் ஏதாவது செய்தி வெளியிட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். அதற்காக தினமும் விவாத நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

இன்றைக்குஇடைநிலை ஆசிரியர்கள், பகுதிநேர ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள், அவர்களை கைது செய்கிறார்கள். இதுகுறித்து ஒருவிவாதநிகழ்ச்சியாவது நடத்தப்படுகிறதா? அரசின் மீதான அச்சத்தால் நடத்தப்படுவதில்லை. அதிமுக ஆளுங்கட்சியாக இருந்தபோது, எப்படியெல்லாம் விமர்சனம் செய்தீர்கள். தவறுகளை நடுநிலையோடு, பத்திரிகை மற்றும் ஊடகங்கள் சுட்டிக்காட்ட வேண்டும்" என்றார்.

மீண்டும் பேச்சுவார்த்தை நடக்கும்பட்சத்தில், பாஜகவுடன் கூட்டணி அமைய வாய்ப்பு உள்ளதா என்ற கேள்விக்கு," நான் ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டேன். பாஜகவினர் தெரிவிக்கும் கருத்துகளுக்கு நாங்கள் பொறுப்பாக முடியாது. எங்களுடைய நிலைப்பாட்டை செப்.25-ம் தேதியே தெளிவுப்படுத்தி விட்டோம். தலைமைக் கழகத்தில், ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வாசித்து எங்களது நிலைப்பாட்டைத் தெரிவித்துவிட்டோம். தினந்தோறும் இதையே கேட்டால், எப்படி பதில் சொல்வது. எந்த விதத்தில் இந்த கேள்வியை கேட்கிறீர்கள் என்று புரியவில்லை" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

## தங்கம் வென்றது இந்திய ஹாக்கி அணி பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி




**ஹாங்சோ , அக். 7–**

ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஆடவர் ஹாக்கியில் இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றுள்ளது. இதன்மூலம் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் இந்திய அணி தகுதி பெற்றது.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஹாக்கி இறுதிப்போட்டியில் ஜப்பானைவீழ்த்திஇந்திய அணி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளது. 5 - 1 என்று கோல் கணக்கில் ஜப்பானை எளிதில் வென்றது இந்திய அணி. தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்று அசத்தியுள்ளது.

அதேநேரம், ஹாக்கியில் பதக்கம் வென்றதன் மூலம் ஹாங்சோ ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 22-வது தங்கம் வென்று இந்தியா சாதனை படைத்துள்ளது. 22 தங்கம், 34 வெள்ளி, 39 வெண்கலப்பதக்கங்களை வென்று இந்தியா பதக்க பட்டியலில் 4-ம்இடத்தை பெற்றுள்ளது.

முன்னதாக, நேற்று நடந்த வில்வித்தை போட்டியின் பெண்கள் ரிகர்வ் பிரிவில் இந்திய வீராங்கனைகள் அங்கிதா பகத், பஜன்கவுர் மற்றும் சிம்ரன்ஜித் கவுர் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர். அதேபோல் ஆடவர் பிரிவில் இந்தியா வெள்ளி வென்றது. அதானு தாஸ், துஷார் ஷெல்கே, தீரஜ் பொம்மதேவரா ஆகியோர் அடங்கிய இந்திய அணி கொரியாவிடம் தோல்வி அடைந்து வெள்ளிப்பதக்கம் வென்றது. இந்த ரிகர்வ் பிரிவில் 13 ஆண்டுகள் கழித்து மீண்டும் பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் அரையிறுதியில் இந்தியாவின் எச்.எஸ்.பிரனாய், சீன வீரருடன் மோதி தோல்வி அடைந்தார். இதனால் அவருக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. செபாக் டக்ரோ விளையாட்டின் இந்திய மகளிர் அணி வெண்கலப் பதக்கத்தை வென்றது. மல்யுத்தத்தில் 62 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் சோனம் வெண்கலம் வென்றார். இதேபோல், 76 கிலோ ஃப்ரீஸ்டைல் பிரிவில் இந்தியாவின் கிரண் வெண்கலம் வென்றார்.

இதனிடையே, ஆசிய விளையாட்டுப்போட்டி வரலாற்றில் முதல் முறையாக இந்தியா 100 பதக்கங்களைக் கடந்து புதிய வரலாறு படைப்பதும் கவனிக்கத்தக்கது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Mr. Pierre-Andre de Chalendar), தலைமை செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Mr. Benoit Bazin) உள்ளிட்ட செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் விஷ்ணு, ஆகியோர் உடனிருந்தனர்.

## கோடநாடு வழக்கு பழனிசாமிக்கு எதிராக உதயநிதி கருத்து கூற விதிக்கப்பட்ட இடைக்கால தடை நீட்டிப்பு



**சென்னை , அக். 7–**

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை தொடர்புபடுத்தி கருத்துகளை தெரிவிக்க அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை வரும் நவம்பர் 2ம் தேதி வரை நீட்டித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனுவில், "கடந்த மாதம் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் சனாதனத்தை ஒழிக்க வேண்டுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியிருந்தார். அவரது பேச்சு பெரும் விவாதப்பொருளாக மாறியது. இந்த விவகாரத்தில் உதயநிதி செப்டம்பர் 7-ம் தேதி அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், 'சனாதனம் என்றால் என்ன' என்பதை வீட்டினுள் பத்திரமாக அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களில் இருந்து நான் தேடிக்கொண்டிருப்பதாக கூறியிருந்தார்.

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ஆட்டு தாடியின் பின்னால் நீண்ட நாள் ஒளிந்திருக்க முடியாது என்றும், ஆடு ஒருநாள் காணாமல் போகும்போது, நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள் என்றும் பேசியுள்ளார். அவரது அறிக்கை எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், அவதூறு பரப்பு வகையிலும் உள்ளன. எனவே, என்னை பற்றி பேச அமைச்சர் உதயநிதிக்கு தடை விதிக்க வேண்டும். ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடாக வழங்க உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக உதயநிதி கருத்துகளை தெரிவிக்க இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, உதயநிதி ஸ்டாலின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மனுராஜ், இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட, வழக்கை நவம்பர் 2ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார். அதுவரை, எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக உதயநிதி கருத்துகளை தெரிவிக்க விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீட்டித்து உத்தரவிட்டார்

## தமிழகத்தின் சமூகநீதி அமைதிக்கு ஆளுநர் குந்தகம் விளைவிக்கிறார்:துரைமுருகன் குற்றச்சாட்டு



**சென்னை, அக். 7–**

"நாயக்கனேரி ஊராட்சிமன்றத்தலைவர் பதவியேற்பு குறித்து உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவைக்கூட அறிந்துகொள்ள முயற்சிக்காமல் தமிழக அரசின் மீது ஆளுநர் திட்டமிட்டு அவதூறுப் பரப்புரையை செய்து வருவது மிகுந்த வேதனைக்குரியது. அரசியல்சட்டப்பதவியில் இருப்பவர் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் போல் பேசி, தமிழகத்தின் சமூகநீதியால் பிறந்துள்ள அமைதிக்கும் குந்தகம் விளைவித்து வருவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல" என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பத்தூர் மாவட்டம், நாயக்கனேரி ஊராட்சிமன்றத்தலைவர் பதவியேற்பு குறித்து உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவைக்கூட அறிந்துகொள்ள முயற்சிக்காமல் தமிழக அரசின் மீது ஆளுநர் திட்டமிட்டு அவதூறுப் பரப்புரையை செய்து வருவது மிகுந்த வேதனைக்குரியது.

அரசியல்சட்டப் பதவியில் இருப்பவர் அரசியல் கட்சித் தலைவர் போல், குறிப்பாக பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் போல் பேசி, தமிழகத்தின் சமூகநீதியால் பிறந்துள்ள அமைதிக்கும் குந்தகம் விளைவித்து வருவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 12,525 ஊராட்சிகளில் 4,357 இடங்கள் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதில் திருப்பத்தூர் மாவட்டம் நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி மட்டுமே நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் காரணமாக அங்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பொறுப்பேற்க இயலாத நிலை இருந்தது.

இந்த நாயக்கனேரி ஊராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் தனது 7-10-2021 நாளிட்ட உத்தரவில் "…. *The learned Government Counsel submitted that the election is unopposed. Since this Court feels that the place is not meant to the person of this category, we make it clear that she shall not take charge…*" (போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். ஒதுக்கப்பட்ட இடத்துக்குரிய பிரிவைச் சேர்ந்தவராக இந்நபர் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிற காரணத்தால் சம்பந்தப்பட்ட நபர் பொறுப்பேற்கக் கூடாது என்று தெளிவாக்குகிறோம்.) எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் ஊராட்சி மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பொறுப்பை ஏற்க இயலாத நிலை ஏற்பட்டது.

திராவிட மாடல் அரசின் சமூகநீதிக் கொள்கை, பாஜகவையும், அதன் அமைப்புகளையும் தமிழ் மண்ணுக்குள் செல்வாக்குப் பெற முடியாமல் தடுத்து வைத்திருக்கிறதே என்ற ஆதங்கம்தான் ஆளுநர் இப்படி பேச காரணமே தவிர, பட்டியலின - பழங்குடியின மக்கள் மீது அவருக்கு இருக்கும் அக்கறை இல்லை.

அப்படி அவருக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருந்தால் "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்" என்று சட்டம் பிறப்பித்துள்ளதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரைசென்றுள்ளவர்களை கடிந்துகொண்டிருக்கலாம். அடிக்கடி டெல்லி செல்லும் அவர், உத்தர பிரதேசத்தில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 31.8 விழுக்காடும், மத்திய பிரதேசத்தில் 63.6 விழுக்காடும் உயர்ந்திருப்பதற்குக் கவலைப்பட்டு குரல் கொடுத்திருக்கலாம். உத்தரப்பிரதேசத்தில் 13,146, மத்தியப் பிரதேசத்தில் 7214, குஜராத்தில் 1201 எனப் பட்டியலினத்தவர் கொலை செய்யப்பட்டது குறித்து வெகுண்டெழுந்திருக்கலாம். ஏன் பழங்குடியினருக்கு எதிராக மத்திய பிரதேசத்தில் 17 விழுக்காடு அளவுக்குக் குற்றங்கள் அதிகரித்திருப்பதைக் கண்டு பதற்றப்பட்டு பேசியிருக்கலாம்.

பாஜக ஆளும் மாநிலங்களில் அதிகரித்து வரும் இத்தகைய கொடுமைகளை எதிர்த்து உள்துறை அமைச்சரிடம் குரல்கொடுக்காத ஆளுநர், உயர்நீதிமன்ற உத்தரவில் உள்ள ஒரு ஊராட்சியை மட்டும் பற்றிப் பேசுவதன் உள்நோக்கம் என்ன? யாரை ஏமாற்ற இந்த நாடகமாடுகிறீர்கள்?

ஆளுநர் சிறப்பாகச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி வரும் திராவிட மாடல் அரசை தொடர்ந்துவிமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. அரசியல் பேச வேண்டும் என்றால் "அரசியல் தலைவராக" தன்னை மாற்றிக் கொண்டு தாராளமாக ஆளுநர் தன் கருத்தை தெரிவிக்கட்டும். அதற்கு பதிலடி கொடுக்க நாங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழக மக்களுமே தயாராக இருக்கிறார்கள்.

எனவே, ஆளுநர் உண்மைக்கு மாறான இத்தகைய பேச்சுகளைத் தவிர்த்து, மாநில சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கும், அரசு நிர்வாகத்தின் கோப்புகளிலும், அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களைகாப்பாற்ற அவர்கள் தொடர்பான லஞ்ச வழக்குகளில் கையொப்பமிடாமல் வைத்துள்ள (*sanction of prosecution*) கோப்புகளிலும் கையெழுத்துப் போடுவதில் தனது நேரத்தை உருப்படியாகச் செலவிட்டு, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் ஆக்கபூர்வமாக செயல்படும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# உடையார்பாளையம் அருகே எம்.ஆர்.கல்லூரியில் உலக விலங்குகள் நாள் கருத்தரங்கம்




அரியலூர்,அக்.7–

உடையார்பாளையம் அருகேஎம்.ஆர்.கல்லூரியில், உலக விலங்குகள் நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சிஇராமசாமி கல்வி நிறுவனங்களின் சார்பாக, சர்வதேச விலங்கு நாள் கருத்தரங்கம்நடைப்பெற்றது. நிகழ்ச்சியில் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஆர்.இரகுநாதன் தலைமைவகித்தார்,இயக்குநர் இராஜமாணிக்கம்முன்னிலை வகித்தார், துணை முதல்வர் சங்கீதா வரவேற்று பேசினார்.

இப்போதைய காலகட்டத்தில், விலங்குகளுக்கு மனிதர்களாகிய நாம் தீமை செய்யாமல் இருந்தாலே போதும், விலங்குகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும். சிங்கம், புலி, சிறுத்தை, ஜாகுவார், சீட்டா, பனி சிறுத்தை, பூமா போன்ற பூனை இனத்தைச் சேர்ந்த வனவிலங்குகள் தோல்களுக்காக வேட்டையாடப்படுகின்றன. அதுகுறித்தவிழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த ஆண்டு விலங்குகள் தினம் கொண்டாடப்படுகிறது என, கல்லூரி தாளாளர் மற்றும் பேராசிரியர்கள் வேல்முருகன், முத்தமிழ்செல்வன், கனிமொழி, நவநிதா ஆகியோர் கூறினார்கள்.

இறுதியில் பேராசிரியர் பா.இளங்கோமணி நன்றியுரை கூறினார். நிகழ்ச்சிக்கு தேவையான ஏற்பாடுகளை,கணிதத்துறை தலைவர், தலைமையியல் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# அரசு உத்தரவாதம் அளித்ததால் போராட்டத்தை வாபஸ் பெறுவதாக இடைநிலை ஆசிரியர்கள் அறிவிப்பு



சென்னை, அக்.7–

"மூன்று மாத காலத்துக்குள் எங்களுடையஊதியமுரண்பாடு சரிசெய்யப்படும் என்ற அரசின் உத்தரவாதத்தால்போராட்டத்தை வாபஸ் பெறுகிறோம்" என்று இடைநிலை ஆசிரியர்கள்சங்கம் தெரிவித்துள்ளது.

ஊதிய முரண்பாட்டை சரிசெய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை டிபிஐ வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்களுடன் தமிழக பள்ளிக் கல்வித் துறை செயலாளர் பள்ளிக் கல்வித் துறை செயலாளர் காக்கர்லா உஷா நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப்பேச்சுவார்த்தைக்குப்பின் செய்தியாளர்களைச் சந்தித்த, இடைநிலை ஆசிரியர்கள் சங்கத்தின் பொருளாளர் கண்ணன் கூறியது: "கடந்த 28-ம் தேதி முதல், டிபிஐ வளாகத்தில் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதத்தின் முடிவில், தமிழக முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஆகியோர், எங்களுடையை சம வேலைக்கு சம ஊதிய கோரிக்கையை பரிசீலித்து, 3 மாத காலத்துக்குள் நிறைவேற்றித் தருவதாகவும், 20,000 இடைநிலை ஆசிரியர்களுக்கான ஊதிய முரண்பாடு சரிசெய்யப்படும் என்று கூறியுள்ளனர்.

எங்களுடைய கோரிக்கையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஆகியோர் மீண்டும் ஒருமுறை பரிசீலித்து, எங்களது கோரிக்கையின் நியாயத்தை நிறைவேற்றிட தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையில், எங்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டதால், இன்று முதல் பள்ளிக்குச் சென்று பணிபுரிய உள்ளோம். இந்த முடிவு அனைவராலும் எடுக்கப்பட்டது.

இன்றிலிருந்து, பணிக்குச் செல்ல முடிவு செய்துள்ளோம். மூன்று மாத காலத்துக்குள், எங்களுடையஊதியமுரண்பாடு சரிசெய்யப்படும் என்ற அரசின் உத்தரவாதத்தால்போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளோம். இன்று முதல் நாங்கள் பணிக்குத் திரும்புகிறோம்.இந்த8நாட்களாக எங்களுடன், எங்களுக்காக பயணித்த அனைவருக்கும் நன்றி.

எங்களுடைய பணி எப்போதும்போல சிறப்பாக இருக்கும். எண்ணும் எழுத்தும் திட்டத்தை சிறப்பாக மேற்கொண்டு, தமிழக அரசுக்கும், முதல்வருக்கும், கல்வித் துறைக்கும் நல்ல பெயரைவாங்கித்தருவோம்என்று கூறி, எங்களது போராட்டத்தை வாபஸ் பெறுகிறோம். இந்தப் போராட்டத்தை கைவிடக் கோரி அரசு சார்பில் யாரும் எங்களை மிரட்டவும், அச்சுறுத்தவும் இல்லை" என்று அவர் கூறினார்.

முன்னதாக, ஊதிய முரண்பாட்டை சரிசெய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை டிபிஐ வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்களை போலீஸார் வலுக்கட்டாயமாக கைது செய்து, பல்வேறு பகுதிகளில் உள்ள சமூகநல கூடங்களில் அடைத்தனர். அங்கும் போராட்டத்தை தொடர்ந்ததால் அனைவரும்விடுவிக்கப்பட்டனர். விடுவித்தாலும் போராட்டம் தொடரும் என்று அவர்கள் திட்டவட்டமாகஅறிவித்திருந்தனர். இந்நிலையில்,இந்தப்போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.




# தென்காசி நகர காங்கிரஸ் சார்பில் எஸ்.பி– க்கு வாழ்த்து தெரிவித்தனர்



தென்காசி,அக்.7–

முதலமைச்சரின் உதவி மையம் மூலம் முதல்வரின் முகவரி துறையில் பெறப்பட்ட மனுக்களுக்கு உரிய முறையில் ஆய்வு செய்து குறை தீர்வு நடவடிக்கையை சிறப்பாக மேற்கொண்டதற்காக 2023ஆம் ஆண்டிற்கான விருதினை தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாம்சன், தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினிடம் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விருது பெற்றார். விருது பெற்ற தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாம்சனை, தென்காசி நகர காங்கிரஸ் கமிட்டி சார்பாக தென்காசி நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாடசாமி ஜோதிடர் தலைமையில் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

இந் நிகழ்ச்சியில் நகர பொருளாளர் ஈஸ்வரன், செயலாளர் தாதா பீர், கவுன்சிலர்கள் சுப்பிரமணியன், ரபீக், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வக்கோட்டை அருகே அக்கச்சிப்பட்டியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



கந்தர்வக்கோட்டை, அக்.7–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிபட்டியில் பள்ளி மேலாண்மைகுழுகூட்டம் நடைபெற்றது, தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி அனைவரையும் வரவேற்றார்,கூட்டத்திற்கு பள்ளி மேலாண்மை குழுத் தலைவி இலக்கியா தலைமை வகித்தார்.

பள்ளி மேலாண்மை குழு துணைத் தலைவி வேதநாயகி, வார்டு உறுப்பினர் கலா ராணி முன்னிலை வகித்தனர். கல்வியாளர் மருத்துவர் சாமிநாதன் நமதுபள்ளியில் சிறந்த பள்ளிக்கான விருது பெறுவதுகுறித்துபேசினார். ஊராட்சிமன்றத்தலைவர் கங்காதரன் கலந்து கொண்டு பள்ளியில் நடைபெறக்கூடியவளர்ச்சி திட்டங்கள் குறித்தும், ஊராட்சிமூலம்பள்ளிக்கு செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் குறித்தும் பேசினார்.கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டமாவட்ட இல்லம்தேடிக்கல்விமைய ஒருங்கிணைப்பாளர் கலையரசன் வாழ்த்துரை வழங்கினர்.

பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் பள்ளி முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பள்ளி மேலாண்மை குழு இணைந்து செயல்பட்டு குழந்தைகளின் அடிப்படை உரிமைகளான கல்வி பாதுகாப்பு வளர்ச்சி போன்றவற்றிற்கும் பள்ளியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவிட துணை குழுக்கள் அமைப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மாற்றுத்திறன் உடைய குழந்தைகளை கண்டறிவது குறித்தும் ஒன்றியத்தில் நடைபெறும் மருத்துவ முகாம் குறித்தும், இல்லம் தேடிக் கல்வி மையத்தில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் முறை குறித்தும்,இக்கூட்டத்தில் இல்லம்தேடிக்கல்விமையம் ஒன்றியஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா, ஆசிரியர்கள் மணிமேகலை செல்வி ஜாய்,வெள்ளைச்சாமி, தனலெட்சுமி பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




▶ மதுரை ஆவின் அலுவலகத்தில் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்களுக்கான பயிற்சி கூட்டத்தில், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் பேசினார். அருகில் பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டு துறை ஆணையர் வினீத் உள்ளார்.இவர்களுடன் ஆவின் பரமன், பாண்டி கோவில் சரவணன், ஆவின் முனீஸ் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அரியலூர் மாவட்டம் திருமானூரில் சமுதாய வளைகாப்பு விழா



அரியலூர்,அக்.7–

திருமானூரில் சமுதாய வளைகாப்புவிழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், திருமானூர் தனியார் திருமண மண்டபத்தில், ஒருங்கிணைந்த குழந்தைவளர்ச்சிதிட்டம்சார்பில் நடைபெற்றசமுதாயவளைகாப்பு விழாவுக்கு,திருமானூர் ஒன்றிய குழுத் தலைவர் சுமதி அசோக சக்கரவர்த்தி தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் திருமானூர் வட்டார அலுவலர் யசோதா தேவி வரவேற்றார். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் தனலட்சுமி சக்திவேல், கீதா ஜெயவேல், திருமானூர் ஊராட்சி மன்றத் தலைவர் உத்திராபதி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திருமானூர் வட்டாரத்துக்கு உட்பட்ட, 180 கர்ப்பிணி தாய்மார்களுக்கு, அரசின் சீர்வரிசைபொருட்களைவழங்கி, அரியலூர்சட்டமன்றஉறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா பேசினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

விழாவில், மதிமுக மாவட்ட செயலாளர் ராமநாதன், ஒன்றிய செயலாளர்கள் அரியலூர் சங்கர், திருமானூர் ரமேஷ், வட்டார மருத்துவ அலுவலர் மணிவண்ணன், வட்டார கல்வி அலுவலர் எழிலரசி, திருமானூர் ஒன்றிய கவுன்சிலர் ரவி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மணிமாறன், ஊராட்சி செயலாளர் சங்கர் உள்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஆவுடையார்கோவில் அருகே நானாக்குடி கிராமத்திற்கு

# குடி தண்ணீர் வசதி கேட்டு பெண்கள் காலி குளத்துடன் சாலை மறியல்



ஆவுடையார்கோவில், அக்.7–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட ஆவுடையார்கோவில் தாலுகா நானாக்குடி கிராமத்தில் ஆண்களும் பெண்களும் காலி குடங்களுடன் குடிதண்ணீர் வசதி கேட்டு திடீர்சாலை மறியல் செய்தனர், அதனால் பள்ளி குழந்தைகள்அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவிலில் உள்ளொர் பள்ளிக்கு செல்ல முடியாமல் தவித்தனர்,கிராம மக்கள் ஒரு மணி நேரம் சாலை மறியல் செய்ததால் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது.

அதன்பிறகுஅங்குவந்த ஆவுடையார்கோவில் காவல்துறையினர் ஊராட்சி மன்றத் தலைவருக்கு தகவல் கொடுத்து அவர் அந்த இடத்திற்கு வந்து குடிதண்ணீர் பைப் லைனை சரி செய்து தருகிறேன் என்று பொதுமக்களிடம் உறுதி அளித்ததின் பேரில் சாலை மறியல் கைவிடப்பட்டது. மரியல் சம்மந்தமாக ஒருவர் கூறும் போது நாங்கள் பலமுறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் எங்களுக்கு குடிதண்ணீர் வசதி கிடைக்கவில்லை என்றும் எங்கள் ஊரில் ஆழ்துளை கிணறு அமைத்தும் அதிலிருந்து தண்ணீர் வருவதில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

அதுபோக ஆழ்துளை கிணற்றுக்கு வரும் மின்சார வயர்களையும் சமூகவிரோதிகள் யாரோ அறுத்து விடுகின்றனர் அதனால் எங்களுக்குஒரு வார காலமாக குடிநீர் வரவில்லை எனவும் அதனால் மிகுந்த சிரமத்திற்கு எங்கள் கிராம மக்கள் ஆளாகி உள்ளோம் என்றும் கூறினார்இந்த திடீர் சாலை மறியலால் ஆவுடையார்கோவில் -அறந்தாங்கி சாலையில் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# தீபாவளியை முன்னிட்டு ரூ.450–க்கு சிறப்பு இனிப்பு தொகுப்பு ஆவின் அறிவிப்பு



சென்னை, அக்.7–

தீபாவளிபண்டிகையை முன்னிட்டு, 5 வகையான இனிப்புகள் அடங்கிய 500 கிராம்தொகுப்பு ரூ.450–க்கு ஆவின் பாலகங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் என்று ஆவின் நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு:பால்மற்றும் பால் உபபொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலை மற்றும் சிறந்த தரத்தோடு வழங்கிவரும் ஆவின் நிறுவனம், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேல் தமிழகத்தின் முன்னோடி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. ஆவின் நிறுவனம் தனது பால் உபபொருட்களான வெண்ணெய், நெய், தயிர், பால்கோவா,மைசூர்பாகு, குலாப்ஜாமுன்,ரசகுல்லா, லஸ்ஸி, மோர், சாக்லேட் மற்றும் ஐஸ் கிரீம் போன்ற பால் பொருட்களை தரமாக தயார் செய்து ஆவின் பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனைசெய்துவருகிறது.

இந்நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விற்பனை செய்யப்பட்ட ஆவின் இனிப்பு வகைகள் பொதுமக்களிடையேநல்ல வரவேற்பை பெற்றதைத் தொடர்ந்து தீபாவளி 2023 பண்டிகைக்கும்கீழ்க்கண்ட தரமான சிறப்பு இனிப்பு வகைகள் எவ்வித விலை மாற்றமும் இன்றி பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. காஜு கட்லீ (250 கி) -ரூ.260,நட்ஸ் அல்வா (250 கி) -ரூ.190,மோத்தி பாக் (250 கி) -ரூ.180,காஜு பிஸ்தா ரோல்(250 கி) -ரூ.320,நெய் பாதுஷா (250 கி) -ரூ.190

மேற்கண்ட5வகையான இனிப்புகள் அடங்கிய தொகுப்பு (Combo Box) 500 கிராம் -ரூ.450 விலையில் ஆவின் பாலகங்கள் மூலம் விற்பனை செய்யப்படும். ஆவின் இனிப்பு வகைகள் அனைத்தும்அக்மார்க்தரம் பெற்ற ஆவின் நெய்யினால், சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் இனிப்புகளாகும். மேற்படி இனிப்பு வகைகள் அனைத்தும் வருகின்ற 10.10.2023 முதல் அனைத்து ஆவின் பாலகங்கள் மற்றும் ஆவின் சில்லறைவிற்பனை நிலையங்கள் மூலமாக கிடைக்கப்பெறும். பொதுமக்களுக்கு தேவைப்படும் இனிப்பு வகைகள் ஆவின் பாலகங்கள் மற்றும் ஆவின் சில்லறைவிற்பனையாளர் களிடமிருந்து பெற்று பயன்பெறலாம்.

மேலும் சிறு குறு நிறுவனங்கள், தனியார் பெரு நிறுவனங்கள், அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு தேவையான இனிப்பு வகைகளுக்கு, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 6வது தளம், விற்பனைப் பிரிவு, கூட்டாண்மைஅலுவலகம், நந்தனம், சென்னை 35 என்ற முகவரியையும், 9444915453, 7358018394, 7358018392,7358018390 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம்"என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் புதிய அறங்காவலர்கள் பதவியேற்கும் நிகழ்ச்சி– எம்எல்ஏ ராஜா பங்கேற்பு



சங்கரன்கோவில். அக்.7–

சங்கரன்கோவில் ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்களாக வக்கீல் சண்முகையா, முப்பிடாதி,முத்துலட்சுமி, ராமகிருஷ்ணன் வெள்ளைச்சாமி, ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சங்கரன்கோவில் திருக்கோவிலில் வைத்து வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா முன்னிலையில் பதவி ஏற்று கொண்டனர்.

இதில் அறநிலையத்துறை அதிகாரிகள், சங்கரன்கோவில் யூனியன்சேர்மன்லாலா சங்கர பாண்டியன், சங்கரன்கோவில் நகராட்சிசேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், மதிமுக மாநில துணை பொதுச் செயலாளர் திமு ராஜேந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர். பாதுகாப்பு பணிகளில் சங்கரன்கோவில் டவுன் இன்ஸ்பெக்டர் சண்முக வடிவு தலைமையில் ஏராளமான போலீசார் ஈடுபட்டனர்.

### கொள்ளிடம் அரசு மேல்நிலைப் பள்ளியில்

# வட்டார அளவிலான மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ முகாம்



கொள்ளிடம்,அக்,7

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட கலெக்டர் மகாபாரதி உத்தரவின்பேரில் வட்டார அளவிலான மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இலவச மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அம்பிகாபதி தலைமை வகித்தார். ஆசிரியர் பயிற்சிநர் ஐசக்ஞானராஜ் வரவேற்றார். ஒன்றிய குழு துணைத் தலைவர் பானுசேகர், வட்டார கல்வி அலுவலர் கோமதி, வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஞானபுகழேந்தி, கவுன்சிலர் அங்குதன், ஊராட்சி மன்ற தலைவர் கனகராஜ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கயல்விழி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொள்ளிடம் ஒன்றிய பெருந்தலைவர் ஜெயபிரகாஷ் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து பேசினார். இம்முகாமில் குழந்தைகள் முதல் 18 வயது வரை உள்ள சுமார் 300 மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

மேலும் கண் பார்வை குறைபாடு, உடல் இயக்க குறைபாடு, மன வளர்ச்சி குறைபாடு, காது கேளாமை போன்ற பல்வேறு வகையான குறைபாடு உள்ளவர்கள் மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர். மாற்று திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, இலவச பேருந்துபயண அட்டை,உதவி உபகரணங்கள் மாதந்திர உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, அறுவை சிகிச்சை செய்வதற்கான பரிந்துரை மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

முகாமில் லயன்ஸ் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மாற்று திறனாளிகளுக்கு உணவு வழங்கினர். கொள்ளிடம் ஒன்றியத்தைச் சார்ந்த அனைத்து ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள் கமலநாதன், தங்க சேகர், ராஜேந்திரன், செல்வம், பாலகிருஷ்ணன், முருகேசன், தங்கமணி, ரமேஷ், வட்டார வளமயத்தைச் சார்ந்த முடநீக்கியல் நிபுணர் மலர்கண்ணன், சிறப்பாசிரியர்கள் பிரவீனா, ரூபா, ராஜலஷ்மி, கீதா, உமா ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் பயிற்றுனர் அபூர்வ ராணி நன்றி கூறினார்.

### சீர்காழி அருகே இரு வெவ்வேறு விபத்துகளில்

# அரசு பேருந்துகள் மோதி இளைஞர் உயிரிழப்பு, இரண்டு பேர் படுகாயம்





சீர்காழி,அக்,7

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே அரசூர் மேம்பாலத்தில் கார் மோதி எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த அதே பகுதியை சேர்ந்த விக்னேஷ் 26 என்ற இளைஞர் நிலை தடுமாறி அரசு பேருந்தில் மோதியதில் பலத்த படுகாயம் அடைந்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் விக்னேஷ் உயிரிழந்தார்.

இதேபோல சீர்காழி அருகே சட்டநாதபுரம் உப்பனாற்று பாலத்தில் அரசு பேருந்து மோதி காரில் வந்த கீழசட்டநாதபுரத்தை சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரவி மற்றும் அவரது ஓட்டுனர் பலத்த காயமடைந்து சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து சீர்காழி மற்றும் கொள்ளிடம் போலீசார்கள் வழக்கு பதிவு செய்து அரசு பேருந்து ஓட்டுனர்களிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொதுமக்களிடம் கண்ணியமாக நடக்க வேண்டும் டி.ஐ.ஜி போலீசாருக்கு அறிவுரை



வேலூர்,அக்,7

காவேரிப்பாக்கம் போலீஸ் நிலையத்தில் வேலூர் சரக டி.ஐ.ஜி. முத்துசாமி திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது போலீஸ் நிலையத்தில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் பார்வையிட்டார். வழக்குகளை தாமதப்படுத்தாமல் விரைவாக முடிக்க உத்தரவிட்டார். போலீஸ் நிலையத்திற்கு வரும் பொது மக்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். வளாகத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு விசுவேசுவரய்யா, துணை போலீஸ் சூப்பிரண்டு ரவிச்சந்திரன், காவேரிப்பாக்கம் இன்ஸ்பெக்டர் மணிமாறன், சப்-இன்ஸ்பெக்டர்கள் சரவணன், அருள்மொழி, பிச்சாண்டி உள்ளிட்ட போலீசார் உடனிருந்தனர்.

# ஆந்திராவில் இருந்து ரயில் மூலம் போதை மாத்திரைகளை கடத்தி வந்த இருவர் கைது







சென்னை, அக்,7

ஆந்திரா மாநிலம் நெல்லூரில் இருந்து இரயில் மூலம் போதை மாத்திரை வாங்கிக் கொண்டு புது வண்ணாரப்பேட்டை வ.உ.சி ரயில் நிலையத்தில் இறங்கி தண்டையார்பேட்டை வைத்தியநாதன் தெருவில் நடந்து சென்ற இருவரை சந்தேகத்தின் பேரில்வண்ணாரப்பேட்டைதுணை ஆணையர் தலைமையிலான உதவி ஆய்வாளர் இர்பான் தனிப்படை போலீசாரால் பிடித்து விசாரணை செய்து புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

போலீசார் நடத்திய விசாரணையில் பெரும்பாக்கம் ஏரிக்கரை புதுநகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஐசெக் என தெரியவந்து இவன் மீது இரண்டு கொலை முயற்சி வழக்குகள் இருப்பதும் அதே பகுதியைச் சேர்ந்த 21 அபிநாத் என தெரியவந்து இவன் மீது 5 கொலை முயற்சி வழக்குகள் இருப்பது விசாரணை தெரிய வந்தது அவர்களிடமிருந்து 90 போதை மாத்திரைகள் 9 சிரஞ்சிஊசி போலீசார் பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

# ஸ்ரீராம் கல்வி வளாகத்தில் செல்ல குரலுக்கான இசை தேடல் நிகழ்ச்சி



திருவள்ளூர், அக். 07 –

திருவள்ளூர், பெருமாள்பட்டு ஸ்ரீராம் கல்வி வளாகத்தில் செல்ல குரலுக்கான இசை தேடல் நிகழ்ச்சியை ரேடியோ சிட்டி எஃப்.எம் 91.1 மற்றும் ஹோண்டா பிக் விங்கும் இணைந்து நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் ப்ஸ்ரீராம் மெட்ரிகுலேஷன் பள்ளி, ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி, ஸ்ரீராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீராம் பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டு தங்களது பாடல் திறமையை வெளிப்படுத்தினர். மேலும் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம் செய்திருந்தது.

முதலில் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியை சேர்ந்த 70 மாணவ, மாணவியர் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். குறிப்பாக மாணவி மைத்ரேயி, சபிதா மற்றும் மாணவர் கிஷோர் குமார் அருமையாக தங்களது பாடல் திறமையை வெளிப்படுத்தினர்.

அடுத்ததாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த 50 மாணவ, மாணவியர் கலந்துகொண்டு தங்கள் பாடல் திறமையை வெளிப்படுத்தினர் . மாணவர் சிவா, மாணவி பிரியா மற்றும் மாணவி வித்தியா அற்புதமாக பாடினர்.

கடைசியாக ஸ்ரீராம் பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த 2மாணவர்களும்மற்றும் ப்ஸ்ரீராம் மெட்ரிகுலேஷன் பள்ளியை சேர்ந்த 6 மாணவ, மாணவியரும் பங்கேற்றனர். பள்ளி மாணவி சினேகா சிறப்பாக பாடினார்.

நிகழ்ச்சியின் முடிவில் ரேடியோ சிட்டி வானொலி ஒருங்கிணைப்பாளர் பாலா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்க்கும் மற்றும் நிகழ்ச்சியினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த கல்லூரி நிர்வாகத்திற்கும் நன்றி கூறினார்.

### கடந்த 15 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த

# ஆயுள் தண்டனை கைதி கைது: அரசு மருத்துவ மனையில் வேலை செய்ததை பார்த்து போலீசார் அதிர்ச்சி



சென்னை,அக்,7

சென்னை தண்டையார்பேட்டையில் கடந்த 2006 ஆம் ஆம் ஆண்டு வீரா கொலை வழக்கில் முக்கிய குற்றவாளிகளான ஹரி கிருஷ்ணன், கருணாகரனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது ஹரி கிருஷ்ணன் 12 ஆண்டுகள் சிறையில் இருந்து பரோலில் வெளியே வந்து மீண்டும் ஆஜராகாமல் 15 மாதங்களாக தலைமறைவாக வாழ்ந்து வந்தான், இதே வழக்கில் 15 ஆண்டுகளாக தலைமறைவாக மற்றொரு குற்றவாளி கருணாகரன் ஆகிய ஆயுள் தண்டனை கைதிகளை தனிப்படை போலீசாரால் தேடப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் அரிகிருஷ்ணனை பிடிக்க சென்னை வடக்கு மண்டலம் தீவிர குற்றவாளிகள் தடுப்பு பிரிவு உதவி ஆணையர் ராயப்பன் தலைமையில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதரன் உதவி ஆய்வாளர் நிர்மல் குமார் ரமேஷ் பாபு ஆகியோர் அடங்கிய தனிப்படை போலீசாரால் தேடிவந்த நிலையில் செல்போன் டவர் லொகேஷன் மூலம் கடந்த வாரம் அரிகிருஷ்ணனை திருச்செந்தூர் கோவில் அருகே தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

அவன் அளித்த தகவலின் பெயரில் முக்கிய குற்றவாளியான 15 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த ஈச்சம்பாக்கத்தை சேர்ந்த கருணாகரன் வெட்டுவாங்கணியில் இருப்பதாக வடக்கு மண்டலம் தீவிர குற்றவாளிகள் தடுப்பு பிரிவு தனிப்படை போலீசாரிடம் தகவல் தெரிவித்தான்.

இதனை அடுத்து கருணாகரன் புகைப்படத்தை வைத்து தனிப்படை போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபடும் பொழுது அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை ஸ்டான்லி மருத்துவமனையில் எலக்ட்ரீசியன் பிளம்பிங் வேலை செய்து வருவது தெரிய வந்தது தகவலின் பெயரில் தனிப்படை போலீசார் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அங்கு நோட்டமிட்டு வந்தனர்.

இந்நிலையில் ஸ்டான்லி மருத்துவமனை அருகே தனிப்படை போலீசார் கருணாகரனை கைது செய்து தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர் இதனை அடுத்து தண்டையார்பேட்டை போலீசார் கருணாகரன் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

### மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட தீயணைப்பு மற்றும்

# மீட்புப்பணிகள் துறை, வருவாய்துறை, ஆகிய துறைகள் சார்பில் முன்னெச்சரிக்கை குறித்த ஒத்திகை நிகழ்ச்சி



மயிலாடுதுறை,அக்,7

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, வருவாய்துறை, ஆகிய துறைகள் சார்பில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு மற்றும் தீத்தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்த ஒத்திகை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி முன்னிலையில் நடைபெற்றது.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் பேரிடர் காலங்களில் எவ்வாறு மீட்புப்பணிகளில் ஈடுபடுவது, பேரிடர் ஏற்படும் போது பொதுமக்களின் உயிர்களையும்,உடமைகளையும் எவ்வாறு மீட்பது குறித்து ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ஒத்திகை முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டு தீயணைப்பு வாகனத்தை பயன்படுத்தி ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கட்டிட இடர்பாடுகளில் சிக்கியவர்களை மீட்டு எடுத்து தேவையான முதலுதவி அளித்தல், தீ விபத்து ஏற்படும் போது அதிலிருந்து அவர்களை மீட்டு முதலுதவி அளித்தல், பேரிடர் காலங்களில் நெடுஞ்சாலையில் மரங்கள் விழுந்தால் அதனை அகற்றி போக்குவரத்து சீர் செய்தல், விபத்து ஏற்பட்டால் எவ்வாறு மீட்பது, மற்றும் கம்பிகளால் இடர்பாடு ஏற்பட்டால் அதனை எவ்வாறு அகற்றுவது குறித்து தீயணைப்பு துறையினர் ஒத்திகை நடத்தி காண்பித்தனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜகணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொறையார் டி பி எம் எல் கல்லூரியில் மேம்பட்ட செயல்பாட்டு பொருட்கள் பற்றிய சர்வதேச மாநாடு





தரங்கம்பாடி, அக்-07:

மயிலாடுதுறை மாவட்டம் பொறையார் பேராயர் மாணிக்கம் லூத்ரன் கல்லூரியில், இரண்டு நாள் மேம்பட்ட செயல்பாட்டு பொருட்கள் பற்றிய சர்வதேச மாநாடு கல்லூரியின் முதல்வர் ஜான்சன் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இயற்பியல் துறை தலைவர் கர்த்தரினாள் புனிதவதி, வரவேற்று வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் செயலாளரும் தாளாளருமான கிறிஸ்டியன் சாம்ராஜ் காணொளி காட்சி மூலம் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர். அறிவானந்தன், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை Abstract புத்தகத்தை வெளியிட்டார்கள். அண்ணாமலை பல்கலைக்கழகத்தின், இயற்பியல் துறை தலைவர். ராக்கப்பன் ஆராய்ச்சி என்றால் என்ன என்பதையும், ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தையும் அதனை எவ்வாறு புரிந்து கொண்டு செய்ய வேண்டும் என்பதையும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கல்லூரியின் துணை முதல்வர், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், பல்வேறு பட்ட கல்லூரியின் பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். இறுதியாக, பேராசிரியர் சிவபாலன் நன்றி நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே மதுக்கடையை திறக்க வலியுறுத்தி கடையடைப்பு போராட்டம்



ஆலங்குடி,அக்.7-

ஆலங்குடி அருகேயுள்ள கொத்தமங்கலத்தில் டாஸ்மாக் மதுக்கடையை திறக்க வலியுறுத்தி அப்பகுதி வணிகர்கள் கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேயுள்ள கொத்தமங்கலத்தில் இயங்கி வந்த 2 டாஸ்மாக் மதுக்கடைகள் பொதுமக்களின் போராட்டத்தால், 2017-ல் இரு மதுக்கடைகளும் மூடப்பட்டன. இந்நிலையில், கடந்த மாதம் கொத்தமங்கலத்தில் ஒரு மதுக்கடை திறக்கப்பட்டது. அதற்கு அப்பகுதி பெண்கள் உள்ளிட்ட ஒருதரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அந்த மதுக்கடை தற்காலிகமாக மூடவதாக வருவாய்த்துறையினர் அறிவித்தனர். அதே நேரத்தில், கொத்தமங்கலம் வர்த்தக சங்கத்தினர், மதுப்பிரியர்கள் மதுக்கடை வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து வட்டாட்சியரகத்தில் சமரசக்கூட்டம் நடத்தி தீர்வு காணலாம் என வட்டாட்சியர் விஸ்வநாதன் தெரிவித்தார். தொடர்ந்து, போராட்டம் கைவிடப்பட்டது, மதுக்கடை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மதுக்கடையை திறக்க வலியுறுத்தி கொத்தமங்கலம் வர்த்தகர் சங்கத்தினர் சார்பில் முழுக்கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதையொட்டி, காலைமுதல் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டன. இதனால், சாலைகள் வெறிச்சோடிக்காணப்பட்டன.

கொத்தமங்கலத்தில் மதுக்கடைக்கு எதிராக ஒரு தரப்பும், ஆதரவாக மற்றொரு தரப்பும் செயல்பட்டு வருவதால், ஆலங்குடி வட்டாட்சியரகத்தில் வட்டாட்சியர் விஸ்வநாதன் தலைமையில் நேற்று மாலை சமாதானக்கூட்டம் நடைபெற்றது.

# தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படவில்லை என அறந்தாங்கி அருகே பெண்கள் சாலை மறியல்



அறந்தாங்கி,அக்.7-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சுப்ரமணியபுரம் கடைவீதியில் விஜயபுரம் கூக னூர்குடியிருப்பு,சித்தகன்னி, கொடிவயல்' புதுக்குடியிருப்பு உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட குடும்பதலைவிகளுக்கு தமிழக அரசு வழங்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாததால் தமிழக அரசு வழங்கக்கூடிய மகளிர் உரிமைதொகை தங்களுக்கு கிடைக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும் எனவும் உரிமைத் தொகை தொடர்பாக ஆன்லைனில் மேல்முறையீடு செய்ய விண்ணப்பித்தாலும் உங்களதுமனுபரிசீலனையில் உள்ளது ஆகவே நீங்கள், மேல்முறையீடு செய்ய இயலாது என கூறுவதாகவும் அதிருப்தியடைந்த பெண்கள் சுப்ரமணியபுரம் கடைவீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த நாகுடி போலீசார் மற்றும் அறந்தாங்கி மண்டல துணை வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மேல்முறையீடு செய்ய அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார், அதிகாரிகள் பேச்சுவார்த்தையை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது, பெண்களின் திடீர் சாலை மறியலால் அப்பகுதியில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# கருவாழக்கரை ஊராட்சியில் 60 ஆண்டுகால கோரிக்கை ரூ.14 லட்சத்தில் புதிய ரேஷன் கடை கட்டிடம் திறப்பு விழா



செம்பனார்கோவில், அக். 07-


மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருவாழக்கரை ஊராட்சியில் கடந்த 48 ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில் ரேஷன் கடை இயங்கி வந்தது. இந்த கடையின் மூலம் 710 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் ரேஷன் கடை இயங்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் 60 ஆண்டு காலமாக கோரிக்கை விடுத்துவந்த நிலையில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம் 2021-22-ன் படி அரசுக்கு சொந்தமான இடத்தில் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் கருவாழக்கரை ஊராட்சி மருத்தூர் கிராமத்தில் புதிய ரேஷன் கடை கட்டிடம் கட்டப்பட்டது.

அதன் திறப்பு விழா செம்பனார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய துணைப் பெரும் தலைவர் மைனர் பாஸ்கரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் வெண்ணிலா தென்னரசு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் வெண்ணிலா தென்னரசு ஒன்றிய கவுன்சிலர் சக்கரபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் பழனிவேல் வரவேற்று பேசினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு புதிய நுகர் பொருள் அங்காடி கடை கட்டிடத்தை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கி பேசினார்.

இதில் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாக குழு தலைவரும், மாவட்ட திமுக துணை செயலாளருமான மு.ஞானவேலன், ஒன்றிய செயலாளர்கள், பி.எம். அன்பழகன், எம். அப்துல்மாலிக், அமுர்த. விஜயகுமார், தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட வளங்கள் அலுவலர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா விஜயலட்சுமி வட்ட வழங்கல் அலுவலர் விஜயகுமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் லோகநாயகி முருகன் மற்றும் திமுக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்

# ஆனைமலையில் பள்ளியை 'பார்' ஆக மாற்றும் மர்ம நபர்கள் நடவடிக்கை எடுக்க பெற்றோர் எதிர்பார்ப்பு



பொள்ளாச்சி , அக். 7-

ஆனைமலை ஒன்றியத்தில் உள்ள சோமந்துறை சித்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி, இரவு நேரத்தில் மதுபாராக மாறி வருவதாக புகார் எழுந்துள்ளது. கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை ஒன்றியத்துக்கு உட்பட்ட சோமந்துறை சித்தூரில் அரசு மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது.

இங்கு சுற்றுவட்டாரப் பகுதிகளை சேர்ந்த 270 மாணவர்கள் படித்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பள்ளி வளாகத்துக்குள் அத்துமீறி புகும் மர்மநபர்கள், பள்ளி வளாகத்தில் அமர்ந்து, மது அருந்துவதை வழக்கமாக கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொதுமக்கள் சிலர் கூறியதாவது: சோமந்துறை சித்தூர் அரசுப்பள்ளி சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு ஜில்லா போர்டு பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது மேல்நிலைப் பள்ளியாக செயல்பட்டுவருகிறது. மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசு அதிகாரிகள் என பலரை உருவாக்கிய இந்த பள்ளி, தற்போது இரவு நேரத்தில் மது அருந்துவோரின் கூடாரமாக மாறிவருகிறது.

பள்ளி வளாகத்துக்குள் இரவு நேரங்களில் நுழையும் மர்ம நபர்கள், வகுப்பறைகள் முன்பு மது அருந்துகின்றனர். பின்னர் மதுபாட்டில்கள், டம்ளர் ஆகியவற்றை பள்ளி வளாகத்திலேயே வீசிச்செல்கின்றனர். மதுபோதையில் பள்ளியின் கழிவறையையும், கழிவறைக்கு செல்லும் தண்ணீர் குழாய்களையும்உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

பள்ளிக்கு காலையில் வரும் மாணவர்கள் வகுப்பறை முன்பு குவிந்துள்ள மதுபாட்டில்களை அப்புறப்படுத்தி விட்டுதான் வகுப்பறைக்குள் செல்கின்றனர். பள்ளி வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்து, மது அருந்துவோரை இரும்புக்கரம் கொண்டு அடக்க போலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

இதுகுறித்து ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கூறும்போது, "பள்ளியில் இரவு நேரக் காவலரை நியமிக்க வேண்டும். பள்ளிக்குள் அத்துமீறி நுழையும் மர்மநபர்கள் மீது போலீஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

# கடையநல்லூர் எவரெஸ்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் நூற்றாண்டு விழா



தென்காசி,அக்.7-

தென்காசி மாவட்டம்- கடையநல்லூர் அச்சம்பட்டியில் எவரெஸ்ட் மேல்நிலைப்பள்ளியில் கலைஞரின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. விழா நாயகர் கலைஞர், சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளின் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பில் பேசிய மாணவர்களில் மாணவி செ. கவி வித்யா முதல் பரிசு எஸ். ஆர். எம். மகளிர் மேல்நிலைப்பள்ளி செங்கோட்டை, 2-வது பரிசு மு. சுவாதிகா எம். எம். மேல்நிலைப்பள்ளி இடைகால், 3-வது பரிசு சு.அ.நஸீஹா,அ. அப்ரஷிரின் எவரெஸ்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அச்சம்பட்டி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சட்டமன்ற நாயகர் கலைஞர் கருத்தரங்கில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் ஆர். ஆவுடையப்பன் சிறப்பாக உரையாற்றிய மாணவர்களுக்கு பரிசுத்தொகையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் நாகராஜன், இணைச்செயலாளர் சாந்தி, துணைச் செயலாளர் ரேவதி, சார்பு செயலாளர் பாஸ்கர், சட்டப்பேரவை செயலாளர் செல்வராஜ் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா. இளவரசி கல்வித்துறை முத்தையா, கடையநல்லூர் வட்டாட்சியர், இடைகால் ஊராட்சி மன்றத் தலைவர் முத்தையா, யூனியன் சேர்மன் சுப்பம்மாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லிங்கம், கடையநல்லூர் நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் ரா. முருகன், எவரெஸ்ட் கல்விக் குழுமங்களின் தலைவர் எஸ். முகைதீன் அப்துல் காதர், பாலிடெக்னிக் இயக்குனர் முகமது தாரிக் ஆசிப், எவரெஸ்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் ஆலோசகர் இசக்கிமுத்து, பள்ளி தலைமை ஆசிரியை இராஜேஸ்வரி, ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், பூங்கொடி ஒன்றிய குழு உறுப்பினர்கள் அருணாச்சலம், திரிகூடபுரம், சித்ரா போக நல்லூர், சண்முகையா காசி தர்மம், பகவதியப்பன்கொடிக் குறிச்சி, இத்தாலியன்பீரப்பா, ராஜ், தங்கப்பாண்டி, பிள்ளையார் பாண்டி, மைதீன் காளிமுத்து, முருகையா, குமார் மற்றும் ஆசிரியை, ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# முன்னாள் ஜனாதிபதி APJ அப்துல்கலாம் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாகுடி அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தென்னங்கன்று வழங்கும் விழா



அறந்தாங்கி, அக். 7-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வருகின்ற 15-ம்தேதி முன்னாள் ஜனாதிபதி APJ. அப்துல்கலாமின் பிறந்தநாள்விழாவை முன்னிட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் சமூக ஆர்வலர் முத்துக்குமார் ஏற்பாட்டில் அப்பள்ளியில் பயிலும் சுமார் 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கபட்டது.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கிய தென்னங்கன்றுகளை உற்சாகமாக வீட்டிற்கு கொண்டு சென்றனர். நிகழ்ச்சியில் அறந்தாங்கி வட்டாரகல்வி அலுவலர் நடராஜன்,ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் நல்லதம்பி, பள்ளிதலைமை ஆசிரியர் (பொ) சண்முகசுந்தரம்,

பள்ளிமேலாண்மை குழுத் தலைவர் நித்யா உதவும் கரங்கள் சேவைகுழும அமைப்பினர், வர்த்தக சங்க நிர்வாகிகள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கைதிகளின் பற்கள் உடைக்கப்பட்ட வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்



மதுரை , அக். 7-

அம்பை காவல் நிலையத்தில் கைதிகளின் பற்கள் உடைக்கப்பட்ட வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த அருண்குமார், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு:'அம்பாசமுத்திரம் போலீஸார் விசாரணைக்காக என்னை காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். காவல் நிலையத்தில் வைத்து என்னை போலீஸார் கடுமையாக தாக்கினர். என் நான்கு பற்கள் உடைக்கப்பட்டன. என்னைப் போல் பலரின் பற்களை போலீஸார் உடைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து சிபிசிஐடி போலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக ஐஏஎஸ் அதிகாரி அமுதா மற்றும் நெல்லை மாவட்ட உதவி ஆட்சியர் விசாரணை நடத்தியுள்ளனர். இந்த வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும், எனக்கு வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கவும், ஐஏஎஸ் அதிகாரி மற்றும் உதவி ஆட்சியரின் விசாரணை அறிக்கை வழங்கவும் உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி டி.நாகார்ஜுன் முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், "இந்த வழக்கில் விசாரணை முழுமையாக நிறைவடைந்துள்ளது. விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். ஐபிஎஸ் அதிகாரி பல்வீர்சிங் மீது நடவடிக்கை எடுக்க அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்பு விசாரணை அறிக்கையை மனுதாரருக்கு வழங்கினால் விசாரணை பாதிக்கப்படும். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பிறகு மனுதாரருக்கு விசாரணை அறிக்கை வழங்கப்படும். மனுதாரர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். இதனால் அவருக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் இழப்பீடு வழங்க முடியாது" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைப் பதிவு செய்து கொண்டு, ''விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர் என்பதால், அவருக்கு வன்கொடுமை சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்க முடியாது. மனு முடித்து வைக்கப்படுகிறது" என நீதிபதி உத்தரவிட்டார்.



கானா நாட்டில் நடைபெற்ற 66-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்து கொண்டு வியாழக்கிழமை சென்னை திரும்பினார். சட்டப்பேரவைச் செயலாளர் சீனிவாசன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



அ.தி.மு.க வின் மாநில இளைஞரணி இணை செயலாளராக பொறுப்பு ஏற்று இருக்கும் மயிலாடுதுறை கோமல் அன்பரசன் , அ.தி.மு.க பொதுச் செயலாளர், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் அருகில் உள்ளார்.



புதுச்சேரி ஊரக வளர்ச்சித்துறை. ஊர வாழ்வாதார இயக்கம் மற்றும் காரைக்கால் வட்டார வளர்ச்சி துறை இணைந்து நேற்று முதல் ஐந்து நாட்கள் பள்ளி மாணவ மாணவிகள் மூலம் போதைப் பொருளுக்கு எதிராக காரைககால் மாவட்ட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் விழிப்புணர்வு பேரணி நடைபெற உள்ளது. இதன் முதல் நிகழ்வாக நேற்று மாலை கோட்டுச்சேரியில் அமைந்துள்ள வ. உ. சி. அரசு மேல்நிலைப் பள்ளியில் இருந்து இணை வட்டார வளர்ச்சி அதிகாரி ரங்கநாதன் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து பேசுகையில் மாணவர்களாகிய நீங்கள் முதலில் போதைப் பழக்கத்திற்கு அடிமையாக கூடாது என்றும் மேலும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் போதை என்பது மது மட்டுமல்ல தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களும் அடங்கும் என்று கூறினார்கள். 100-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்ட இப்பேரணி பள்ளிகளை சுற்றியுள்ள முக்கிய வீதிகளில் பொதுமக்களுக்கு போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்திய வண்ணம் பதாதைகள் ஏந்தி சென்றார்கள். இந்நிகழ்வில் பள்ளியில் துணை முதல்வர் கனகராஜ் மேலும் வட்டார வளர்ச்சித்துறையின் மாரியப்பன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் கிராம சேவகர் இருதயராஜ் உள்ளிட்ட கூட்டமைப்பு ஊழியர்கள் விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டார்கள்.



சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தின் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 34 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டம் தா பழூரில் சமுதாய வளைகாப்பு விழா



அரியலூர்,அக்.7-

அரியலூர் மாவட்டம், தா பழூரில், சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.இது பற்றி ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியதாவது:

அரியலூர் மாவட்டம்,ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, தா.பழூர் எம்.ஆர் திருமண மண்டபத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் மூலம், கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. தா.பழூர் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பா.சரளாதேவி முன்னிலையில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மாவட்ட திட்ட அலுவலர் க.அன்பரசி தலைமையில் நடைபெற்ற விழாவில், தா.பழூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சரளாதேவி வரவேற்று பேசினார். ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா ஆகியோர், 180 கர்ப்பிணி பெண்களுக்கு, வளையல் அணிவித்து, சீர்வரிசை பொருட்கள் வழங்கி வாழ்த்தி பேசினார்.

இந்நிகழ்வில் தா.பழூர் சித்த மருத்துவ அலுவலர் வசுமதி, ஒன்றியக்குழு உறுப்பினர் இரா. அண்ணாதுரை, திருமண மஹால் உரிமையாளர் முத்தையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இதில் மாவட்ட விவசாய தொழிலாளரணி அமைப்பாளர் என். ஆர்.ராமதுரை, ஒன்றிய அவைத்தலைவர் எஸ். சூசைராஜ், மதிமுக மாவட்ட செயலாளர் ராமநாதன், மதிமுக ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், சங்கர், திமுக பொருளாளர் த.நாகராஜன், ஒன்றிய துணை செயலாளர்கள் க.சாமிதுரை, இந்துமதி நடராஜன், அ.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ். ஆர்.தமிழ்ச்செல்வன், கோவி. சீனிவாசன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் ந.கார்த்திகைகுமரன், வெ.பாலசுப்ரமணியன், த.குணசீலன், ஆர். கே.நளராசன்,எழிலரசி அர்ச்சுனன்,மருத்துவர் மா.சங்கர்,முனைவர் முருகானந்தம்,தா.பழூர் நகர செயலாளர் கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள், கர்ப்பிணி பெண்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர், குழந்தைகள் வளர்ச்சி திட்ட மேற்பார்வையாளர் க.தமிழரசி நன்றி தெரிவித்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், சிவபுரம், ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ் இணையக் கல்விக்கழகமும், மாவட்ட நிர்வாகமும் ஒன்றிணைந்து "மாபெரும் தமிழ்க் கனவு" என்னும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று துவக்கி வைத்து, பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, பாடலாசிரியர் யுகபாரதி, கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளை அறங்காவலர் முனைவர்.கவிதா சுப்பிரமணியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# மாபெரும் தமிழ்க் கனவு தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை



தென்காசி,அக்.7-

தென்காசி மாவட்டம்- புளியங்குடி வீராசாமி செட்டியார் பொறியியல் கல்லூரியில் தென்காசி மாவட்ட வருவாய்துறை அலுவலர் கு. பத்மாவதி தலைமையில்விழா நடைபெற்றது. சிறப்புரை ஏற்று பேச்சு போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவர்களுடன் கலந்துரையாடினார் பேராசிரியர் அருணன் கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய தர்மதுரை திரைப்படத்தின் பாடலான நீயும் பத்து மாசம், நானும் பத்து மாசம் என்ற பாடல்வரிகளை மையப்படுத்தி மாணவ மாணவிகளுக்கு விளக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேச்சுப்போட்டியில்பங்கு பெற்ற மாணவ,மாணவிகள் வீராசாமி செட்டியார் பொறியியல் கல்லூரியில் வெள்ளத்துரைச்சி, பரணிகா, சத்யா,காமராசர் அறிவியல் மற்றும் கலை கல்லூரி சுரண்டை ச. பிரியதர்ஷினி, பவுன்காசி,ஜே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆய்க்குடி கல்யாணி ஸ்ரீ, மாரிச்செல்வி,ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி கொடிக் குறிச்சி சஃப்ரின்,சப்ரீன், ரசூல் ஷிப்பானா, வசந்த பிரபாகரன்,யு.எஸ்.பி.கல்லூரி கொடிக்குறிச்சி ருத்ரா தேவி, உத்திரா தேவி, வியாச கலை மற்றும் அறிவியல் கல்லூரி சுப்பிரமணியபுரம் ஷிபானா பாத்திமா, அமல் சாதித்யா ஆகியோர் கீழடி நம் தாய்மடி, திரைகடல் ஓடி திரவியம் தேடு, ஆழி ஆண்ட அரசர்கள், ஏறு தழுவுதல், தமிழ்நாடும் தமிழரும் நாம் சிறியோர் இல்லை, தமிழ் எம் உயிருக்கு நேர், காலம் வெல்லும் தமிழ் மருத்துவம், விடுதலைப் போரில் வீர தமிழகம், பசிப்பிணி போக்கிய பண்பாளர் ராமலிங்க சுவாமிகள், செம்மொழியான தமிழ் மொழி, பழம்பெரும் தமிழ் இலக்கணம் தொல்காப்பியம், தமிழகத்தில் மகாத்மாகாந்தி, போன்ற தலைப்புகளில் பேச்சு போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்.

# கார் திருடனை பிடிக்க தவறான முகவரிக்கு சென்ற போலீசார் பொதுமக்கள் மறியல்: புதுக்கோட்டை அருகே பரபரப்பு



**பொன்னமராவதி , அக். 7-**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே காரையூரில் கார் திருடன் வீட்டிற்கு செல்வதற்கு பதிலாக அதே பெயரைக் கொண்ட முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீட்டிற்குள் புகுந்த சென்னை போலீசை மடக்கிய பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னையை அடுத்த செங்கல்பட்டுவை சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி. கார் டிராவல்ஸ் நடத்தி வரும் இவரது நான்கு வாகனங்கள் காணவில்லை என மறைமலைநகர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். காவல்துறையினர் விசாரணையில் கார் திருடியவர் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே காரையூரை சேர்ந்த இளைஞர் பாரதி என்பவர் தெரியவந்தது.

இதனையடுத்து அவரை விசாரிப்பதற்காக மறைமலைநகர் எஸ்எஸ்ஐ சிவா, கிருஷ்ணமூர்த்தியின் உதவியாளர்கள் நான்கு பேருடன் அழைத்துக் கொண்டு காரையூருக்கு வந்துள்ளார். காரையூர் வந்து விசாரித்ததில் அவருக்கு கிடைத்த தவறான தகவலின் அடிப்படையில் காரையூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரதி சிதம்பரம் வீட்டிற்கு நேற்று அதிகாலை 4 மணி அளவில் சென்றுள்ளனர்.

பாரதி சிதம்பரம் சென்னைக்கு சென்ற நிலையில் அவரது வீட்டில் வயதான பெண்மணி அழகம்மாள் இருந்துள்ளார். அதிகாலையில் காவல்துறையினர் வந்ததையடுத்து அதிர்ச்சியடைந்த அழகம்மாள் அக்கம்பக்கத்தினரை உதவிக்கு அழைத்துள்ளார். பாரதி சிதம்பரத்தின் உறவினர்கள் மறைமலைநகர் எஸ்.எஸ்.ஐ சிவாவை விசாரிக்கையில் அவர் தவறுதலாக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரதி சிதம்பரம் வீட்டிற்கு வந்தது தெரிய வந்தது. இதனால் ஆத்திரமடைந்த முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரதி சிதம்பரத்தில் உறவினர்கள் எஸ்.எஸ்.ஐ சிவா மற்றும் அவருடன் வந்தவர் கார் டிரைவர் உட்பட 5 பேரை மடக்கி பிடித்தனர்.

இதனையடுத்துகாரையூர் காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்படவே சம்பவ இடத்திற்கு அவர்களும் விரைந்தனர். இதற்குள் கோபமடைந்த பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர் அவர்களிடம் காரையூர் போலீசாரின் பேச்சு வார்த்தையையடுத்து மறியலை கைவிட்டனர். காரையூர் காவல்துறையினர் மறைமலைநகர் எஸ் எஸ் ஐ சிவா மற்றும் அவருடன் வந்தவர்களை காரையூர் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். திருடனை பிடிக்க வந்த காவல் துறையினர் பெயர் மாற்றத்தால் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரின் வீட்டிற்கு சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஆசிய விளையாட்டு: 100 பதக்கங்களை கடந்து புதிய வரலாறு படைத்தது இந்தியா

# கார் திருடனை பிடிக்க தவறான முகவரிக்கு சென்ற போலீசார்: பொன்னமராவதி அருகே போராட்டம்





# கூட்டணி முறிவு: ஒரே கேள்வியை எவ்வளவு நாளைக்கு கேட்பீங்க: எடப்பாடி டென்ஷன்


சென்னை / புதுக்கோட்டை | 07.10.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

06.10.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



மு. செல்லையா , ஈழத்துக் கவிஞர் (பி.1906) (இ.1966)



முடியரசன் , தமிழகக் கவிஞர் (பி.1920) (இ.1998)



புளியங்குடி க.பழனிச்சாமி , தமிழக அரசியல்வாதி (பி.1938) (இ.2007)

## இன்றைய நினைவு நாள்



ஆல்பிரெட் டிக்கன் , ஆத்திரேலியாவின் 2வது பிரதமர் (பி.1856) (இ.1919)



அ. வெங்கடாசலம் , தமிழக அரசியல்வாதி (பி.1955) (இ.2010)



ஏ. ஜெகந்நாதன் , இந்திய இயக்குநர் (பி.1946) (இ.2012)

## செபமாலை அன்னை விழா